## சுருக்கம்.

பள்ளிக் கல்வி – அரசுத் தேர்வுகள் – அரசாணை (நிலை) எண்.77, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 7-5-2001-க்கு திருத்தம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (வி.1) துறை.

அரசாணை (நிலை) எண்.53

நாள்: 21-4-2003.

படிக்கப்பட்டவை:- 1. அரசாணை (நிலை) எண்.77, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 7-5-2001.

2. அரசுத் தேர்வுகள் இயக்குநர் கடிதம் எண்.075195/எச்.8/2003, நாள்: 1-8-2002.

---

**ஆணை:**

பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 2 இனம் (√)-ல் கீழ்க்கண்ட நிபந்தனை குறிப்பிடப்பட்டுள்ளது:-

> மறுமதிப்பீட்டின் போது கூடுதல் மதிப்பெண்கள் இரண்டு வரை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. கூடுதல் மதிப்பெண்கள் மூன்று மற்றும் அதற்கு மேலும் இருந்தால் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் திருத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும். இதே போன்று மறு மதிப்பீட்டின் விளைவாக மதிப்பெண்கள் குறைந்தால் அவ்வாறு குறைக்கப்படும் மதிப்பெண்கள் இரண்டு வரை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. மறுமதிப்பீட்டில் குறையும் மதிப்பெண்கள் மூன்றும் அதற்கு மேலும் இருந்தால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அதன் அடிப்படையில் மதிப்பெண்களை குறைத்து திருத்தப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும். ஆனால் தேர்ச்சி பெறாமல் மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் மாணவ/மாணவிகளை பொறுத்தமட்டில் மேலே தெரிவித்துள்ள மதிப்பெண் குறித்த நிபந்தனை பொருந்தாது. தேர்ச்சி பெறாதவர்களுக்கு மறு மதிப்பீட்டின் போது என்ன மதிப்பெண் வருகிறதோ அதன் அடிப்படையில் தேர்வு முடிவு நிர்ணயம் செய்யப்பட்டு தேவைப்படின் திருத்திய மதிப்பெண் சான்று வழங்கப்படும்.

2. மார்ச் 2002-ல் நடைபெற்ற மேல்நிலைத் தேர்வில் 514836 பதிவெண்ணில் திரு ஏ.வினோத் என்னும் தேர்வர் தேர்வு எழுதி உயிரியல் பாடத்தில் 194 1/2 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். (உயிரியல் – தாவரவியல் 72 1/2 + உயிரியல்–விலங்கியல் 72 + செய்முறை 50) 194 1/2 மதிப்பெண்கள் பெற்றதால் சான்றிதழ் 195 மதிப்பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அன்னார் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்திருந்தார். அவருடைய விடைத்தாளை மறு மதிப்பீடு செய்ததில் உயிரியல்–விலங்கியல் பாட பகுதியில் வினா எண்.34-க்கு கூடுதலாக 2 மதிப்பெண்கள் வழங்கலாம் என பாடவல்லுநர் குழு பரிந்துரை செய்துள்ளனர். ஆனால் அரசாணையின்படி 3 மதிப்பெண்களுக்கு குறைவான மடிமதிப்பெண்களில் கூடுதலோ அல்லது குறைவோ இருந்தால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது என்று அரசாணை எண்.77, பள்ளிக் கல்வி, நாள்: 7-5-2001-ல் ஆணையிடப்பட்டுள்ளதால் அன்னாருக்கு மறுமதிப்பீட்டில் மாற்றம் ஏதுமில்லை என அரசு தேர்வுகள் இயக்குநரால் முடிவு அறிவிக்கப்பட்டது.

3. மேற்காண் முடிவினை எதிர்த்து தேர்வர் சென்னை, உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, அதில் அவர் உயிரியல் – தாவரவியல் பகுதியில் வினா எண்.18–க்கு கூடுதலாக 1/2 மதிப்பெண்ணும், உயிரியல் – விலங்கியல் பகுதியில் வினா எண்.34–க்கு 2 மதிப்பெண்களும் ஆக மொத்தம் 2 1/2 மதிப்பெண்கள் வழங்க வேண்டினார். இம்மனுவினை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் மனுதாரரின் விடைகளை விடைகுறிப்புகளுடன் ஒப்பு நோக்கையில்; அவைகள் சரியாகவே உள்ளன எனவும், எனவே, உயிரியல் பாடத்தில் 2 1/2 மதிப்பெண்கள் வழங்கி ஒரு வார காலத்திற்குள் புதிய மதிப்பெண் சான்றிதழ் வழங்க உத்தரவிட்டார். நீதிமன்ற ஆணையை எதிர்த்து மனு செய்வதில் பயனில்லை என்றும், நீதிமன்ற ஆணையின்படி 2 1/2 மார்க் கூடுதலாக வழங்கி புதிய மதிப்பெண் சான்றிதழ் வழங்கலாம் என்றும் அரசு வழக்கறிஞர் ஆலோசனை அளித்தார். எனவே, உயர்நீதிமன்ற ஆணையை செயல்படுத்த உரிய உடனடி நடவடிக்கை எடுக்கும் படி அரசு கடிதம் எண். 27194/வி1/2002 பள்ளிக் கல்வி, நாள்: 9–8–2002–ல் அரசு தேர்வுகள் இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4. மேற்கூறிய நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு, இது போன்ற பிரச்சனைக்குரிய நிகழ்வுகள் இனி ஏற்படக் கூடாதென்பதற்காகவும் மாணவ/மாணவிகள் நலன் பாதிக்கப்படக் கூடாதென்பதற்காகவும் மறுமதிப்பீடு சம்பந்தமாக அரசாணை (நிலை) எண்.77, பள்ளிக் கல்வி, நாள்: 7–5–2001–க்கு கீழ்க்கண்டவாறு அரசு திருத்தம் வெளியிடுகிறது.

<u>திருத்தம்.</u>

அரசாணை (நிலை) எண்.77, பள்ளிக் கல்வி, நாள்: 7–5–2001–ல் பத்தி 2–ல் தற்பொழுது உள்ள இனம் (V) முற்றிலுமாக நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழே குறிப்பிட்டுள்ள வாசகம் இனம் (V) ஆக சேர்க்கப்படுகிறது.

"விடைத்தாள் மறுமதிப்பீட்டின் போது எந்த அளவுக்கு மதிப்பெண்கள் கூடுதலாக / குறைவாக வருகிறதோ அந்த அளவின் அடிப்படையில் திருத்திய மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும். இம்மறு மதிப்பீட்டிற்கு தேர்வில் தேர்ச்சி பெறாதவர்களும் விண்ணப்பிக்கலாம்".

5. மேலே குறிப்பிட்டுள்ள திருத்தம் மார்ச் 2003 மேல்நிலை பொதுத் தேர்வு முதல் நடைமுறைக்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.வி. சங்கர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை–600 006.

ந.க.எண்.023890/எச்.1/2003,
நாள்: 28–4–2003.

<u>மேற்குறிப்பு.</u>

அரசாணை நகல் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

இணை இயக்குநர் (மேல்நிலை)

பெறுநர்:
1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. இணை இயக்குநர் (கல்வி) பாண்டிச்சேரி.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
4. அனைத்து அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள்.
5. அனைத்து அலுவலர்கள் (அலுவலகம்)
6. அனைத்து பிரிவுகள் (அலுவலகம்)
இருப்பு கோப்பு.